## பாடம்- 20 முதல் ஏழு வாதைகள் (யாத்:6-9)

பெரும்பான்மையான மக்கள் நல்ல போட்டியை கண்டு மகிழ்ச்சி அடைகிறார்கள். விளையாட்டு போட்டிகளில் நமக்கு பிடித்தமான அணியை நாம் உற்சாகப்படுத்துவோம். அரசியலில் போட்டியானது மிகவும் தீவிரமாக இருக்கும். மற்றும் பல காலத்திற்கு பிறகு தான் முடிவும் தெரிய வரும். நீங்கள் அடுத்த இரண்டு பாடங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மதத்திற்கு இடையேயான போட்டியை பற்றி கற்றுக் கொள்ள போகிறீர்கள். இது, எப்போதும் ‘‘யார் மிகுந்த வல்லமை வாய்ந்தவர்கள்’’ என்பதற்கான பலப்பரீட்சை என குறிப்பிடப்படுகிறது. இந்த வாதத்திற்கான அடிப்படை கேள்விகள், ‘‘யார் மிகுந்த வல்லமை மிக்கவர்?’’ மற்றும் ‘‘யார் உண்மையான தேவன்’’ என்பதாகும்.

இந்த போட்டியிலே பார்வோன், அவனுடைய மந்திரவாதிகள் மற்றும் எகிப்தின் பொய்யான தெய்வங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து மோசே, ஆரோன் மற்றும் ஒரே உண்மையான கர்த்தருக்கு எதிராக இருக்கிறார்கள். இஸ்ரவேலருக்கு, அவர் சர்வ வல்லமையுள்ளவர் என்பது ஏற்கனவே தெரியும். ஆனால்

இப்போது, தேவன் ‘‘தன்னை விடுவிக்கிறவர்’’ என்பதை இஸ்ரவேல் மக்கள் புரிந்து கொள்ளும் படியாக ‘‘இருக்கிறவராகவே இருக்கிறேன்’’ என்பதையும் வெளிபடுத்துவார். இந்த போட்டியிலே, பார்வோன் திரும்ப திரும்ப தன் இருதயத்தை தேவனுக்கு எதிராக கடினப்படுத்தி அவருடைய ஊழியக்காரருக்கு செவிகொடாமல் போனான். எனவே தேவன் அவனை சில தெரிந்தெடுத்தலை செய்ய அனுமதித்தார்.

சீனாயிலிருந்து பயணம் செய்து எகிப்தை அடைந்த பிறகு ஆரோன், இஸ்ரவேல் புத்திரரின் மூப்பரை கூடிவரச் செய்து, தேவன் அவர்களின் உபத்திரவங்களை கண்ணோக்கினார் என்றும் அவர்கள் மீது அக்கறை கொண்டுள்ளார் என்பதையும் தெரிவித்தான்.

தேவன், மோசேக்கு கொடுத்த அடையாளங்களையும் செய்து காட்டினான். ஜனங்கள் அவர்கள் கேட்டதையும், கண்டதையும் குறித்து உண்மையாகவே வியப்படைந்தார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை சந்தித்தார். அவர்கள் மோசேயையும், ஆரோனையும் நம்பி தலைகுனிந்து தேவனை தொழுதுகொண்டார்கள். (யாத் 4:31)

பின்பு மோசேயும், ஆரோனும் பார்வோனிடத்தில் போய், “இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், தன் ஜனங்கள் மூன்று நாள் வனாந்திரத்தில் பிரயாணம் செய்து தன்னை தொழுது கொள்ள வேண்டும் என கூறுகிறார்” என்றார்கள்.

அதற்கு பார்வோன் கர்வத்துடன், “நான் இஸ்ரவேலை போகவிட, கர்த்தரின் வார்த்தையை கேட்கிறதற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன். நான் என் அடிமைகளை வனாந்திரத்திற்கு போகும்படி நிச்சயமாக அவர்களை அனுப்புவதில்லை” என்றான்.

எகிப்தியர்கள் பல தெய்வங்களை தொழுது கொண்டார்கள். அவைகள் தங்களை ஆபத்துகளிலிருந்து பாதுகாக்கும் என்ற நம்பிக்கையுடன் அவற்றை தங்களால் முடிந்த வரை சந்தோஷப்படுத்தினார்கள்.

இந்த கோபத்திலே, பார்வோன், “இஸ்ரவேல் அடிமைகள் செங்கல் செய்வதற்கு வைக்கோல் கொடுக்க வேண்டாம்” என கட்டளையிட்டான். “அவர்கள் தாங்களே போய் தங்களுக்கு வைக்கோல் சேர்க்கட்டும், ஆனாலும் முன்பு செய்து கொடுத்த கணக்கின்படியே செங்கல் செய்ய வேண்டும்” என்றும் கூறினான்.

இதனால் அவர்களின் வாழ்க்கை கடினமானதனின் நிமித்தம் இஸ்ரவேல் ஜனங்கள் ஆரோனுக்கும், மோசேக்கும் எதிராக கடுமையாக குற்றஞ்சாட்டினார்கள்.

மோசே அவர்களின் குற்றச்சாட்டுகளை கர்த்தரிடத்தில் கூறிய போது, அவர் மோசேயிடம், “நான் பார்வோனுக்கு செய்வதை இப்பொழுது காண்பாய். என்னுடைய பலத்த கரத்தினால் அவன் உங்களை போக விடுவான். நானே கர்த்தர், ’இருக்கிறவராகவே இருக்கிறேன்’ என்பதை ஜனங்களிடம் கூறு. நான் அவர்களின்

கூக்குரலை கேட்டேன். அவர்களோடே செய்த உடன்படிக்கையை நினைவு கூர்ந்தேன்.

நான் ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் கொடுப்பேன் என வாக்குதத்தம் பண்ணின இடத்திற்கு உங்களை திரும்ப அழைத்துச் செல்வேன். உங்கள் மேல் எகிப்தியர் சுமத்தின சுமைகளை நீக்கி, நான் உங்களை விடுவித்து, உங்களை அடிமைதனத்திற்கு நீங்கலாக்கி, ஓங்கிய கையினாலும், மகா தண்டனைகளினாலும் உங்களை மீட்பேன்' என்று இஸ்ரவேல் மக்களிடம் சொல்" என்றார் (யாத் 6:6)

மோசே இவற்றையெல்லாம் இஸ்ரவேல் மக்களுக்கு அறிவித்தாலும், அவர்கள் தங்களின் கொடுமையான அடிமைத்தனத்தினாலும், வேலைபளுவினாலும் உற்சாகமில்லாமல் அவனுக்கு செவிகொடுக்கவில்லை.

பின்பு கர்த்தர் மோசேயிடம், "நீ பார்வோனிடம் போய் இஸ்ரவேல் ஜனங்களை அனுப்பி விடும்படி கேள்" என்றார். ஆனால் அவனோ, "நான் இதிலே சிறிதும் சிறந்தவன் அல்ல. இஸ்ரவேல் புத்திரரே எனக்கு செவிகொடுக்கவில்லையெனில் பார்வோன் எனக்கு எப்படி செவிகொடுப்பான்?" என்று கேட்டான்.

அதற்கு கர்த்தர், "நீ போ, நீ பேச வேண்டியதை நான் உனக்கு அறிவிப்பேன்" என்றார்.

பார்வோனிடத்தில் போய், இஸ்ரவேல் ஜனங்களை ஆராதனை செய்ய அனுப்பும்படி மோசே பேசிய போது, அவனுக்கு 80 வயதும் ஆரோனுக்கு 83 வயதுமாய் இருந்தது. பார்வோன் ஒரு அடையாளத்தை கேட்ட போது, ஆரோன் தன் கையிலிருந்து கோலை கீழே போட்டான். அது சர்ப்பமாய் மாறிற்று.

எகிப்தின் மந்திரவாதிகளும், சூனியக்காரரும் தங்கள் கோலை கீழே போட்டபோது, அவைகளும் சர்ப்பங்களாயின. ஆனால் திடீரென ஆரோனின் சர்ப்பமாக மாறிய கோலோ மற்ற சர்ப்பங்களை விழுங்கிற்று. ஆனாலும் பார்வோன் செவிகொடாமற் போனான்.

கர்த்தர், பார்வோன் நைல் நதிக்கு காலையிலே புறப்பட்டு வரும் போது ஆரோனையும், மோசேயையும் அவனிடத்திற்கு போகச் சொன்னார். எகிப்தியர்கள் தங்கள் வாழ்நாள் நிலைத்திருக்க நைல் நதியின் தண்ணீரை 'ஹோப்பி' என்ற பெயரில் தெய்வமாக வழிப்பட்டார்கள்.

மோசே பார்வோனிடம், "நீ எங்களுடைய ஜனங்களை அனுப்ப மறுப்பதால், எகிப்திலுள்ள தண்ணீரெல்லாம் இரத்தமாக மாறும். மீன்கள் செத்து, தண்ணீர் குடிக்கத்தக்கதாய் இராமல் நாறிப்போகும்" என்றான்.

உடனே ஆரோன் தன் கோலினால் தண்ணீரை அடித்த போது, அது இரத்தமாயிற்று. நதிகள், அணைகட்டுகள் மற்றும் குளங்களிலுள்ள தண்ணீர் மட்டுமல்லாமல், எகிப்து தேசமெங்கும் மரப்பாத்திரங்களிலும், கற்பாத்திரங்களிலுள்ள தண்ணீரும் இரத்தமாய் மாறிற்று. எகிப்தின் மந்திரவாதிகளும் கொஞ்சம் தண்ணீரை இரத்தமாய் மாற்றிக் காட்டினார்கள்.

எனவே மோசேவுக்கும், ஆரோனுக்கும் பார்வோன் செவிகொடுக்கவில்லை. எகிப்தியர் எலலோரும் குடிக்கத்தக்க தண்ணீருக்காக நதியோரத்தில் ஊற்றுத் தோண்டினார்கள்.

ஏழு நாட்கள் கழித்து, மோசே பார்வோனிடம், "என் ஜனங்களை எனக்கு ஆராதனை செய்ய அனுப்பிவிடு என கர்த்தர் சொல்லுகிறார். நீ மறுத்தால் தவளைகள் உங்கள் நிலங்களை நிரப்பும்" என்றான். தவளையும் எகிப்தியரால் தெய்வமாக வணங்கப்பட்டது. ஆரோன் தன் கோலை நீட்டியபோது, தவளைகள் நதியிலிருந்து வர ஆரம்பித்தன.

எகிப்திய மந்திரவாதிகளும் சில தவளைகளை வரவழைத்து காட்டினார்கள். விரைவாய் அவைகள் எகிப்து தேசத்தை மூடிக்கொண்டது. அவைகள் எகிப்தியரின் வீடுகளிலும், உணவுகளிலும் மட்டுமல்ல படுக்கை அறையிலும் காணப்பட்டன.

பிறகு பார்வோன் மோசேயிடம், "நான் என் மனதை மாற்றிக் கொண்டேன். உங்கள் ஜனங்கள் வனாந்திரத்திற்கு போய் தங்கள்

தேவனை தொழுது கொள்ளலாம். இந்த தவளைகள் நீங்கும்படி கர்த்தரை வேண்டிக் கொள்ளுங்கள்'' என்றான்.

மோசே அப்படி செய்தபோது, மறுநாள் தவளைகள் எல்லாம் செத்துப்போயிற்று. ஜனங்கள் அவைகளை பெரிய குவியலாக குவித்தார்கள். விரைவாக அவைகள் நாற்றமெடுக்க ஆரம்பித்தன. ஆனாலும் தேவன் ஏற்கனவே சொல்லியிருந்தபடி, பார்வோன் தன் மனதை மாற்றிக் கொண்டு, ஜனங்களை அனுப்ப மறுத்தான்.

மறுநாள், ஆரோன் தன் கோலால் பூமியின் புழுதியை அடித்தபோது அது பேன்களாய் மாறியது. விரைவாக எகிப்தின் மனிதர் மேலும், மிருக ஜீவன்கள் மேலும் பேன்கள் மூடி அவர்களை தொந்தரவு செய்தது. பார்வோனுடைய மந்திரவாதிகளால் இதை செய்யக் கூடாமல் போயிற்று.

மந்திரவாதிகள் பார்வோனிடம், ''இது தேவனுடைய விரல்'' என்றார்கள். ஆனாலும் பார்வோன் செவிகொடாமல் போனான். மறுபடியும் தேவன் பார்வோனை எச்சரிப்பதற்காக நான்காவது வாதையை அனுப்பினார். மகா திரளான வண்டு ஜாதிகளால் நிலத்தை மூடினார்.

ஆனால் எபிரெயர்கள் வாழ்ந்த எகிப்தின் பகுதியிலோ வண்டுகள் காணப்படவில்லை. உடனே பார்வோன் ஜனங்களை போக அனுமதித்தான். எனவே மோசே, ''மறுநாள் வண்டுகள் போய்விடும்'' என உறுதி அளித்தான். ஆனாலும் ''நீ உன் மனதை மாற்றிக் கொள்ளக் கூடாது'' என பார்வோனை எச்சரித்து விட்டு சென்றான்.

ஆயினும் பார்வோன் தான் சொன்னபடி செய்யாமல், எப்பொழுதும் செய்து வந்தபடியே செய்தான். வண்டுகள் போன பிறகு, அவன் பிடிவாதமாய் ஜனங்களை அனுப்ப மறுத்தான்.

தேவன் ஐந்தாவது வாதையாக, வெளியிருக்கும் எகிப்தின் மிருகஜீவன்களின் மீது குறிப்பாக அவர்கள் தெய்வமாக வணங்கும் மாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளின் மீதும் கொள்ளை நோயை வரப் பண்ணினார். எகிப்தியரின் மிருக ஜீவன்கள் எல்லாம் செத்துப்போயிற்று. இஸ்ரவேல் புத்திரரின் மிருகஜீவன்களில் ஒன்றாகிலும் சாகவில்லை.

இது எகிப்திற்கு மிகப்பெரிய இழப்பாய் இருந்தது. ஆனாலும் பார்வோன் விட்டுக் கொடுக்கவில்லை. எனவே தேவன் மோசேயையும், ஆரோனையும் கைப்பிடி நிறைய சூளையின் சாம்பலை எடுத்து வானத்திற்கு நேராக பார்வோன் முன்னிலையில் இறைக்கச் சொன்னார். அது எகிப்து தேசம் எங்கும் தூசியாகி மனிதர் மேலும், மிருகஜீவன்கள் மேலும் எரிபந்தமான கொப்புளங்களை எழும்ப பண்ணியது. இது ஆறாவது வாதை.

அந்த கொப்புளங்கள் நிமித்தம் மந்திரவாதிகளும் பார்வோனுக்கு முன்பாக நிற்ககூடாதிருந்தது. பார்வோன் மிகுந்த கோபமடைந்தான். ஆனாலும் தன் இருதயத்தை கடினப்படுத்தி மோசேயின் வார்த்தையை கேளாமல் போனான்.

இதற்கு பிறகு, மோசே தேவனிடமிருந்து வந்த சிறப்பு செய்தியுடன் பார்வோனிடம் சென்றான். அவன், ‘‘இதுவரை என் கையை உனக்கு விரோதமாக நீட்டாதிருந்தேன். நீ பூமியில் இராதபடி உன்னை நிர்மூலமாக்க என்னால் முடியும். ஆனாலும் முழு உலகமும் என் நாமத்தை அறிந்து கொள்ளும்படி உன்னை இவற்றிலிருந்தெல்லாம் விடுவித்தேன். நீங்கள் இதுவரையிலும் பார்த்திராத கல்மழையை நாளைக்கு பெய்யப்பண்ணுவேன்.

எல்லா ஜனங்களும், மிருக ஜீவன்களும் வீட்டிலே இருங்கள். வெளியிலிருப்பவைகள் செத்துப் போகும் என்று தேவன் சொல்லுகிறார்’’ என்று பார்வோனிடம் கூறினான். (யாத் 9:13-19)

சில எகிப்தியர்கள் மோசேயை விசுவாசித்து, தங்கள் மிருகஜீவன்களையும், அடிமைகளையும் வீட்டிலே வைத்தார்கள். அப்படி செய்யாதவர்களின் மிருகஜீவன்களையும், அடிமைகளையும் மற்றும் எல்லா உயிர்களையும் கல்மழை கலந்த அக்கினி அழித்து போட்டது.

ஆனால் இஸ்ரவேல் புத்திரர் இருந்த இடத்திலே மட்டும் கல்மழை இல்லாதிருந்தது. பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைத்து ‘‘எனக்கு தெரியும், நான் பாவம் செய்தேன். நான் துன்மார்க்கன். கர்த்தரோ நீதியுள்ளவர். இந்த மகா இடிமுழக்கங்களும், கல்மழையும் ஒழியும்படிக்கு தயவு செய்து கர்த்தரை நோக்கி

விண்ணப்பம் பண்ணுங்கள். நான் உங்கள் ஜனங்களை அனுப்பி விடுகிறேன்'' என்றான்.

அதற்கு மோசே, "நான் பட்டிணத்திலிருந்து புறப்பட்டவுடன் இந்த இடிமுழக்கங்கள் ஓய்ந்து கல்மழை நின்றுபோம்'' என்றான். அவன் புறப்பட ஆயத்தமானபின் பார்வோனை நோக்கி, "தேவனாகிய கர்த்தருக்கு பயப்படமாட்டீர்கள் என்பதை அறிவேன்'' என்றான். அது உண்மையாகவும் இருந்தது.

மழையும், கல்மழையும், இடிமுழக்கமும் நின்று போனதை பார்வோன் கண்டபோது, தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் விரோதமாக பிடிவாதமாக தன் இருதயத்தை கடினப்படுத்தினான். தேவன் தன்னுடைய வல்லமையை தெய்வப் பிறவியாக பார்க்கப்படும் பார்வோனுக்கும், அவனுடைய ஜனங்கள் நம்பும் எல்லா பொய்யான தெய்வங்களுக்கு காண்பித்தார்.

ஆனாலும் பார்வோனும், அவனுடைய ஊழியக்காரரும் தங்கள் இருதயத்தை கடினப்படுத்தியதால் இந்த போட்டி இன்னும் முடியவில்லை.

இந்த பாடம் மிகவும் முக்கியமானது. ஏனென்றால், இது எகிப்தின் தெய்வங்களிடத்திலும், பார்வோனிடத்திலும் காணப்படும் பாவமான தீய சக்திகளுக்கும், மோசே மற்றும் ஆரோனின் நீதி மற்றும் நல்ல சக்திகளுக்கும் இடையேயான போட்டியை காட்டுகிறது.

தேவன் தன்னுடைய பிள்ளைகளின் வாழ்க்கையில் அவர் செய்ய வேண்டியதை தக்க நேரத்தில் வெற்றிகரமாக செய்து முடிப்பார். தேவ நம்பிக்கையில்லாத பார்வோனை போன்ற பாவியான துன்மாக்கனையும் தேவன் தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்ற, தன்னுடைய நாமத்தை அறிவிக்க பயன்படுத்த முடியும் என்பதை அப்போஸ்தலனாகிய பவுல் நினைவுபடுத்துகிறார் (ரோ 6:17)

இந்த பாடத்தின் முக்கியமான சத்தியம் என்னவென்றால் தேவன் தன்னுடைய வாக்குதத்தத்தை நம்பி, பொறுமையுடன் தனக்காக காத்திருந்து, தன்னுடைய சார்பில் செயல்படுகிறவர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கிறார். தன்னுடைய ஜனங்களை

மட்டும் விடுதலை செய்யாமல், மற்றவர்களும் தன் வல்லமையையும் அன்பையும் பார்த்து தன்னை அங்கீகரிக்கும்படி செய்கிறார்.

இந்த பாடத்தை திரும்பி பார்க்க பின்வரும் கேள்விகளுக்கு விடையளிக்கவும்.

1. வாதைகளின் முடிவிலே பார்வோன் எந்த கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார்? (6 வினாடிகள் நிற்கவும்)

‘உண்மையான தேவன் யார்? என்ற கேள்விகளுக்கு’ என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

2. ஒவ்வொரு வாதைக்கு பிறகும், பார்வோன் தன் இருதயத்திலே என்ன நினைத்தான்? (6 வினாடிகள் நிற்கவும்)

    “அவன் பிடிவாதமாக தேவனுக்கும் இஸ்ரவேல் ஜனங்களுக்கும் எதிராக நின்றான்” என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

3. தேவன் வாதைகளை அனுப்புவதன் இறுதி நோக்கம் என்ன? (6 வினாடிகள் நிற்கவும்)

    தேவன், “நான் இதை செய்து முடித்த பிறகு உலகத்திலுள்ள எல்லா தேசங்களும் நானே கர்த்தர் என அறிந்துகொள்வார்கள்” என கூறினார்” என்று சொல்வீர்களானால் அது சரியான பதில்.

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்த பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடத்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள். பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற

நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

இந்த பாடத்தைப் பற்றி தெரியாத ஒரு நபருக்கு இந்த பாடத்தை கற்றுக் கொடுங்கள். இப்போது நம் நாட்டில் நடந்து கொண்டிருக்கும் விளையாட்டு போட்டியுடனோ அல்லது அரசியல் விவாதங்களுடனோ ஒப்பிட்டு சொல்லவும்.

மோசேயை குறித்து அவருக்கு அறிவித்து, தேவன் மோசே மூலமாக செய்ததையும், அவன் தேவனுக்கு கீழ்படிந்ததால், அவர் தன்னுடைய திட்டத்தை மோசே மூலமாக வெற்றிகரமாக நிறைவேற்றியதையும் விளக்கி கூறவும்.

பாடம் முடிந்தது